விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 2 இதழ் 287
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-11-1994

"சமாதான சூழ்நிலையை வரவேற்போம்" தமிழ்ச் செல்வன்

(யாழ்ப்பாணம்)
சமாதான சூழ்நிலை ஒன்று ஏற்ப டுமாயின் அதனை எமது மக்க ளும் நாமும் வரவேற்போம் என தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல்துறை பொறுப் (6-ம் பக்கம் பார்க்க)

சமாதான முயற்சியில் அரசு உறுதி!

– லக்ஷ்மன் கதிர்காமர் –

(கொழும்பு)
அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் உறுதியாக இருப்ப தாகவும் எனினும் சமாதான (6-ம் பக்கம் பார்க்க)

தொடண்டா விவகாரம் ஐ. தே. க. ஆராயும்

[கொழும்பு]
ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகி அரசுடன் சேர்ந்து கொண்ட திரு. எஸ். தொண்டமான் குறித்துகட்சியின் நிறைவேற் (6-ம்பக்கம பார்க்க)

கிளாலியிலிருந்து பயணிகளுடன் யாழ். வந்த மினிபஸ் மீது ஹெலி தாக்குதல்

சாரதியுடன் நால்வர் காயம்!

சாவகச்சேரியில் நேற்று அதிகாலை சம்பவம்!!

[யாழ்ப்பாணம்]
கிளாலியிலிருந்து பயணிகளுடன் யாழ்வந்த மினிபஸ் ஒன்றின் மீது ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்று துப் பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து தாக்குதல் நடத்தியது. இதில் மினிபஸ் சாரதி உட்பட நான்கு பயணிகள் படு காயமடைந்தனர். நேற்று அதிகாலை 1-40 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கிளாலியில் இருந்து சாவகச்சேரியில் ஹெலி தாக் படுகாயம் அடைந்தனர். யாழ். நோக்கி வந்து கொண் கியது. இச்சம்பவத்தில் சாரதி முதுகில் படுகாயமடைந்த டிருந்த பயணிகள் பஸ்மீது உட்பட நான்கு பயணிகள் (6-ம் பக்கம் பார்க்க)

சமாதானப் பேச்சு பாதிப்படையும்?

[கொழும்பு]
கிழக்கு ஐரோப்பிய நாடு களிலிருந்து பெருமளவு ஆயு தங்கள் விடுதலைப் புலிகளுக்கு வருவதாக வெளிவந்துள்ள செய்தியினால் அரசுக்கும்-விடு தலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவிருக்கும் சமா தானப் பேச்சுவார்த்தைகள் பா தி ப் ப டை யா மென்று கொழும்புச் செய்தியாளர்கள் கருத்துத் தெரிவிப்பதாக 'வெரித்தாஸ்' நேற்று குறிப் பிட்டது.

விடுதலைப் புலிகள் தமது ஆயுதபலத்தை பலப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த ஆயுதங்களை கப்பல்மூலம் தரு விப்பதாகவும் ஆயுதங்களுடன் வரும் கப்பலை தடுத்து நிறுத் தும்படி இலங்கை அரசு இந்
திய அரசிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் வெரித் தாஸ் மேலும் தெரிவித்தது.
வி-சி

இராணுவ நடவடிக்கைகள் வழமைபோல் தொடரும்

பிரிகேடியர் கெமுனு குலதுங்க

[கொழும்பு]
விடுதலைப் புலிகளின் இரா ணுவ நடவடிக்கைகள் நிறுத் தப்பட்டது தொடர்பாக அரசு இதுவரை எதுவித செய் தியும் வெளியிடாத நிலை யில்

இராணுவத்தினரின் நடவடி க்கைகள் வழமைபோல் தொடர்ந்து நடைபெறும்.
இராணுவப் பேச்சாளர் பிரி (6-ம் பக்கம் பார்க்க)

கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக் கிழமை வழமையான நேரத் துக்கு நடைபெறுமென விடு தலைப்புலிகள் அரசியற் துறை யினர் அறிவித்துள்ளனர்.

பயிற்சிபெறும்

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

[கொழும்பு]
பல நிறுவனங்களில் தற் போது வேலைக்கு நியமிக்கப் பட்டிருக்கும்பட்டதாரிகளுக்கு ஒரு வருட பயிற்சிக்குப்பின் நிரந்தர நியமனங்கள் வழங் கப்படும் என்று திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது, 6500 பட்டதாரிகள் அரசா ங்க, தனியார் நிறுவனங்களில் தற்போது பயிற்சிபெற்று வரு கின்றார்கள். இவர்கள் தமது பயிற்சியை ஒரு வருடம் பூர் (5-ம் பக்கம் பார்க்க)

வடக்குகிழக்கு நிவாரணபணிக்கு பிரிட்டிஷ் அரசு உதவும்

– ரொனிவோல்ரி உறுதி

(கொழும்பு)
''வடக்கு-கிழக்குப் பகுதி யில் புதிய அரசாங்கம் மேற் கொள்ளவிருக்கும் மீள்குடி யேற்றத்திட்டத்துக்கும். நிவா ரணப்பணிகளுக்கும், பிரிட் டிஷ் அரசாங்கம் உதவி வழங் கும்''

இவ்வாறு இலங்கைக்கு விஜ யம் மேற்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் வெளியுறவு பொது நலவாய விவகாரத் துணை அமைச்சர் ரொனிவோல்ரி ரூபவாஹினிக்கு அளித்தபேட் டியில் கூறினர். அவர் தமது பேட்டியில் மேலும் கூறுகை யில்:
''மிகத் தெளிவான நிலையில் (6ம் பக்கம் பார்க்க)

வடபகுதிவரும் ஆயுதங்கள் உக்ரேனிலிருந்துகொள்வனவு

படையினர் உஷார் நிலையிலிருக்க உத்தரவு

[மொஸ்கோ]
சோவியத்திலிருந்து பிரிந்து சென்ற உக்ரேனிலிருந்து இலங்கையின் வடபகுதிக்கு தேவையான பல போர் ஆயு தங்கள் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாக உக்ரேன் இல ங்கை அரசுக்கு அறிவித்துள் ளது.

இப்போர்த் தளபாடங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொள்வனவு செய்யப்பட்டி ருப்பதாகவும் அவர்களின் கப்பல் மூலம் இவ் ஆயுதங் கள் வடபகுதி நோக்கி எடு த்து வரப்படுவதாகவும் உக் ரேன் தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட்மாதம் 25 ம் திகதி இவ் ஆயுதங்களுடன் குறிப்பிட்ட கப்பல் வடபகுதி நோக்கிப் புறப்பட்டதாகவும் உக்ரேன் மேலும் தெரிவித் துள்ளது.
(5ம் பக்சும் பார்க்க)

மீனவர்களுக்கும் ஓய்வூதியம்!

(கொழும்பு)
மீனவர்களுக்கான ஓய்வூதி யத் திட்டம் ஒன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இத்திட்டத்தி னல் ஒரு லட்சத்து 10 ஆயி ரம் மீனவர்கள் நன்மை அடைவார்கள் என்று கடற் றொழில் நீரியல்வள அமைச்சு தெரிவித்தது.
18 வயதுக்கு மேற்பட்டவர் களும், 59 வயதுக்குட்பட்ட வர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார் (5-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

C 90 விற்பனைக்கு

நல்ல தரமான H A2 90 மோட்டார் சைக்கிள், ஆர் மோனியம், வில்லுவண்டில், கரத்தைவண்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- போட் டார் சைக்கிள் தங்கப்பழம், வழக்கம்பரை, வண்டில் ஆர்மோனியம், தொடர்பு: ந. சிவசண்முகமூர்த்தி, தொல்புரம். (சி-1316)

வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய் கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராச ரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப் பாணம். (சி-1313)

தவறிவிட்டது

15-11-94 அன்று நாச்சி மார்கோவிலடியில் வெ. வடி வேலு, வெ. கதிரவேலு என் னும் இரு பெயருடைய இல. 382170164 V அடையாள அட்டையுடனும், ஒரு தொகைப் பணத்துடனும் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் வெ. வடிவேலு, 29, அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கும்படி மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-1317)

இராசி பலன்

18 - 11 - 1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 2)

பூரணை ந. ப. 12-32 வரை கார்த்திகை பி. இ. 5 11 வரை, இராகுகாலம் காலை 10-38 முதல் 12-08 வரை, சுபநேரம் காலை 6-08 முதல் 7-38 வரை, திருக்கார்த் திகை விரதம் குமாராலய தீபம்.

மேஷம்: மன மாற்றம், குடும்ப செலவு, புதிய யோசனை.

இடபம்: ஆரவாரம், தொழில் மாற்றம், சகோதர உதவி,

மிதுனம்: கூடிப் பேசுதல், மனநிறைவு, சுபவிரயம்.

கடகம்: தெய்வ சிந்தனை, முரண்பாடு, கூடன்பகை.

சிங்கம்: வாக்குவாதம், மனப்பயம், பயண தாமதம்.

கன்னி: குடும்ப வேற்றுமை தவறுன செய்கை, அலைச்சல்.

துலாம்: விருந்தினர் மகிழ் ச்சி, உல்லாச பயணம், வெளி யார் உதவி.

விருச்சிகம்: விரும்பிய து கிடைத்தல், கல்விச் சிறப்பு, காரிய சித்தி.

தனுசு: புத்திரர் கவலை, ஆசைக்கோட்டை, தொழில் பிணக்கு.

மகரம்: ஞான சிந்தனை, காரியதாமதம், பணமுடை,

கும்பம்: புதிய நட்பு, தொழில் சிறப்பு, விருந்துண் ணல்.

மீனம்: பிறர் வன்மம், மன விரக்தி, இக்கட்டான நிலை.

— ஜோஸ்யர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும்

பதிவு செய்தல் — 1995

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994 டிசம்பர்15-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வழங்கல்கள் :

01. எழுதுப்பொருட்கள்
02. புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் — மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்கூல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள், (தட்டச்சு இயந்திரங் கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந் திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகல வகை ஹார்ட்வெயார் பெயின்டுகள், வார்னிஸ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச் சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருட் களும் கண்ணாடிப் பொருட்களும்
12. மரம்
13. கட்டிடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப் பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புக்கள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், தூணையுறுப்புகள்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங் களும்
21. மழைக்கோட்டுகள், சேற்றுச் சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துகள் முதலியன.
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்தி களும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசா யனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்.

சேவைகள் :

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்பு கள் திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர் கள், திருத்தவேலைகளும் பராமரிப்புகளும்
04. மரச்சல் தளபாடங்களின் திருத்த வேலைகள்
05. மரத்தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

எந்திரவியல் சேவைகள் :

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் / திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள் / கேற்றுகள் உருவமைத்தல் / பொருத்துதல்
07. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என் பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் / பொருத்துதல்
09. பட வரைதல் (புளு பிறின்ரிங் றேயிங்ஸ்)

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்கல்கள்/சேவைகள் —1995'' எனக் குறிப்பிடப் பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப் பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல் வேலி என முகவரியிடப்படவேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப் பம் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத் துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 150/- பெறுமதி யான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையும் இணைத்து அனுப்பவேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர் களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்க ளிலிருந்து விலை மனுக்களை கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப் பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட் களை சேவை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப் படும் மாதிரிகளுடன் ஒத்திராதபொருட்கள் / சேவை களை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக் கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்க ளைக் கொண்டிருக்கவேண்டும்.

01. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
02. பெயரும் விலாசமும்
03. தொலைபேசி இலக்கம்
04. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
05. வியாபாரத்தின் தன்மை
06. வங்கியாளர்களின் பெயர்
07. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்
08. ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம் (3 ற்கு மட்டும்.

குறிப்பு:

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்க ளிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப் படுகின்றது.

எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

[அ] ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டிடங்களை நிர் மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்க ளம்/கூட்டுத்தாபனம்/சபைகளில்பதிவு செய்துள் ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி/அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப் பட வேண்டும்.

[ஆ] விண்ணப்பதாரர் கிளிநொச்சி/வவுனியா மாவட் டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந் தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களிலுள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம் மாவட்டத்திற்குரிய வியாபாரப்பதிவுஅத்தாட்சி யுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

[இ] உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாகவேலை செய் யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் [7 இற்கு மட்டும்] தருக.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

[எ 4501[

காமினி கொலை விவகாரம்:

இளம் தமிழ்ப் பெண் கைது

(கொழும்பு)

காமினி திஸாநாயக்கா கிராண்ட்பாஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் கொல்லப்பட்டது சம்பந்த மாக தமிழ்பெண் ஒருவர்கைது செய்யப்பட்டதாக கொழும புத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

நுவரெலியாவைச் சேர்ந்த பிரமீளா அருணாசலம் (வயது 19) என்ற இளம்பெண்ணே பொலிசாரால் கைதுசெய்யப் பட்டதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தப் பெண் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளதாகவும அறியப்படுகிறது. க இ

சனசமூக நிலையங்கள் மூலம் விவாகப் பதிவு

(கொழும்புத்துறை)

திருமணம் செய்தும் இதுவரை காலம் சட்டப்படி விவாகப் பதிவு செய்யாதவர்கள் தாங் கள் வசிக்கும் பகுதிக் சன சமூக நிலையங்கள் ஊடாகப் பதிவுத்திருமணம் செய்வதற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கு மாறு யாழ். மாவட்ட பிறப்பு

[6ம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணம் நல்லூர் இணையகம்

தொண்டா ஒரு சந்தர்ப்பவாதி பதவிக்காக கட்சி மாறுவார்

— செல்லச்சாமி கூறுகிறார்

(கொழும்பு)

திரு. தொண்டமான் ஒரு அசல் சந்தர்ப்பவாதி இதனை முழுநாடுமே நன்கு அறியும். நாளைக்கு இன்னொரு கட்சி ஆட்சியமைத்தால் கூட அதில் அவர் இணைந்து கொள்வார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

இவ்வாறு இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி 'சண்டே லீடர்' ருக்கு வழங்கிய போட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

திரு. தொண்டமான் அவர்கள் ஆரம்பத்தில் இருந்து நம்பிய ஏழை எளிய தோட்டத்தொழிலாளர்களுக்கு நம்பிக்கைக்குரியவராக இருக்கவில்லை. கடந்த மாதம் பொதுசன ஐக்கிய முன்னணியை ஆதரிக்குமாறு சகல தோட்டச் சங்கங்களுக்கும் எழுதினேன். இ. தொ. காவுக்கும் அதன் பிரதியை அனுப்பினன் எனது வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது. இது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். தொண்டமான் கூட என் வழியைப் பின்பற்றுகிறார். இதனால் நான் பெருமைப்படுகிறேன். தேர்தலில் தான் நடுநிலைமை வகிக்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்த தொண்டமான் பின அமைச்சர் பதவி வழங்கப்பட்டதும் பொதுசன முன்னணியுடன் இணைந்து கொண்டார். திரு. தொண்டமான்உயர்ந்தபதவிகளுக்கும் அமைச்சர் பதவிக்கும் ஆசையுள்ளவர் இந்த பதவிக்காகவே கட்சிகளுடன் இணைந்து கொள்கிறார். இது தோட்டத் தொழிலாளரின் நலனுக்காகவல்ல.

இகழ்ச்சியான வேலையை எதையும் திரு. தொண்டமான் செய்யமாட்டார் என பல பேர்நம்பினர்கள். இப்பொழுது தாங்கள் கருதியது பிழை என அவர்களே உணர்கிறார்கள்.

அவரது எயர் லங்காவுடனான தொழில் சம்பந்தமான உடன்பாடு, காங்கிரஸின் சொத்தை ஈடுவைத்தல், அரச வங்கியில் கடனளியாதல் போன்ற விடயங்கள் பத்திரிகைகளில் அம்பலத்துக்குவந்தன. இவையாவும் பிழையான செயல் என சுட்டிக்காட்டிய ஒன்றை கடந்த வருடம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றினர்கள் எனினும் சட்டப்படி தற்போதும் நான் இ. தொ. காவின் பொதுச்செயலர் தான். திரு. தொண்டமான் தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி என்னை இ. தொ. கவிலிருந்து விலகச் சொன்னார். நான் மறுத்தேன். முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜதுங்கவை அணுகி என்னை விலகுமாறும் எல்லாம் சரிக்கட்டலாம் எனவும் கூறினர். நான் ஏற்காமல் அமைச்சர்பதவியிலிருந்தும் ராஜினாமா செய்தேன். நான் இ. தொ. க. விலிருந்து விலகமில்லை. இப்போது வழக்கும் நடக்கிறது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட திருமதி சந்திரிகாவில் எமக்கு பூரண நம்பிக்கை உண்டு. இந்த சொற்ப காலத்திலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்துள்ளார். ஆகவே நாம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு என்றும் ஆதரவு நல்குவோம் என்றும் அவரது பேட்டியில் மேலும் தெரிவித்தார். கே

உதவி நிறுவனங்களிடமிருந்து இலங்கைக்கு அதிக நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களிடமிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கூடுதலான உதவிகள் கிடைக்கவிருக்கின்றன.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இதற்கான பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே கடந்த ஆகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய அபிவிருத்தி முயற்சிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக 387 கோடி 10 லட்சம் ரூபா கடனுதவி கிடைக்க இருக்கிறது.

இலங்கையில் கிராமிய அபிவிருத்தி முயற்சிகளுக்கென சுவீடன் வழங்கும் உதவிகள் அதிகரிக்கப்பட விருக்கின்றன. இதற்காக சுவிடன் வழங்க விருக்கும் நன்கொடைத் தொகை 19 கோடி 60 லட்சம் ரூபாவாகும் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கும் சுவீடன் 2 கோடி 20 லட்சம் ரூபாவை வழங்கவிருக்கிறது.

சந்தைப்படுத்துதல் தகவல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியும் கைத்தொழில் நுட்பங்களை விருத்தி செய்யவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

தேசிய சேமிப்பு வங்கியினால் அமுல் செய்யப்படும் தொழில் நுட்ப உதவித் திட்டத்துக்கென 3 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது. (ரி)

புதிய வகுப்பறைகள்

[கொழும்புத்துறை]

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி அண்மையில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கத்தால் திறந்துவைக்கப்பட்டது.

-154

சுவிஸ் தமிழர் மத்தியில் மோதல்கள் அதிகரிப்பு

(சூரிச்)

சுவிஸ் வாழ் தமிழர்களுக்கிடையே மீண்டும் மோதல் சம்பவங்கள் இடம் பெற்று வருவதால் சுவிஸ்லாந்தில் வதியும் தமிழர்களுக்கு பெரும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் அமைப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அவ்அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இச்சம்பவங்களால் சுவிஸில் தமிழர் விரோக்களை புதுப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாடு கடத்தப்படக்கூடிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

சிலரின் அதிகாரத்திற்கு ஏட்டிக்குப் போட்டியாக இடம் பெறும் வன்செயல்களால் முழு ஈழத் தமிழர்களுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-க

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நல்ல உடல்வாகுள்ள தயார்நிலையிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முறைமாற்று அடிப்படையில் வேலை செய்வதற்கு தேவை

உயரம் : 5' 4''மும் அதற்கு மேலும்

வயது : 25 – 45

கல்வித் தராதரம் : குறைந்தது 8–ம் வகுப்பு

அனுபவம் : மேலதிக தகைமையாக கருதப்படும்.

★ தயவுசெய்து சொந்தக் கையெழுத்தில் முழுமையான சுய விபரங்களுடன், 23 – 11 – 94 காலை 11-00 மணிக்கு நேரில் வரவும்.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்

183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(ஏ-4505)

சம்பள அளவுத்திட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1994-12-16 ம் திகதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
வியாபார நிருவாகம்
கிறிஸ்தவ நாகரீகம்
வர்த்தகம்
நாடகமும் அரங்குக் கலைகளும்
பொருளியல்
ஆங்கிலம்
நுண்கலை
இந்து நாகரீகம்
மெய்யியல்
அரசறிவியல்
சமஸ்கிருதம்
கணிதமும் புள்ளிவிபரவியலும்
ஆற்றுகைக் கலை - கர்நாடக சங்கீதம் வாய்ப்பாட்டு
ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம்/பண்ணிசை
ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம்/வாத்தியங்கள் - வீணை/வயலின் மிருதங்கம்
ஆற்றுகைக்கலை - (நடனம்) பரதநாட்டியம்
ஆற்றுகைக் கலை - நடனத்திற்கான வாய்ப்பாட்டு (பரதநாட்டியம்)
ஆற்றுகைக்கலை - நடனத்திற்கான மிருதங்கம் (பரதநாட்டியம்)

2. தற்காலிக கட்டுரை ஆசிரியர்
வரலாறு
புவியியல்

3. தற்காலிக போதனாசிரியர்
ஆங்கிலம் தரம் 11
பரதநாட்டியம்
மிருதங்கம்
கர்நாடக சங்கீதம் - (வாய்ப்பாட்டு)
வீணை

4. இடைவரவு விரிவுரையாளர்
வர்த்தகம் — வர்த்தக கைத்தொழிற் சட்டம்
கணக்காய்வு / வரிவிதிப்பு
வியாபார நிருவாகம் —சட்டச்சூழல் / வங்கியியல்
மெய்யியல் — பொது, சமூக உளவியல்/மத்திய கால மெய்யியல் ஆகியன கற்பித்தற்கு
அரசறிவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும்
பிரான்சிய மொழி
நாடகமும் அரங்குக் கலைகளும் — அரங்க வரலாறு/தயாரிப்பு முறை/நடிப்புக் கொள்கை/இந்திய அரங்கு ஆகியன கற்பித்தற்கு.
கட்டடக்கலை/சிற்பக் கலை/ஓவியம் தீட்டுதல்
கிறிஸ்தவ நாகரீகம் — பழைய ஏற்பாட்டியல்/புதிய ஏற்பாட்டியல்/இலங்கை கிறிஸ்தவ சபை வரலாறு/கிறிஸ்தவ மெய்யியல்/கிறிஸ்தவ வழிபாட்டியல்

5. இடைவரவு போதனாசிரியர்
கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)
பண்ணிசை
வயலின்
வீணை

சம்பள அளவுத்திட்டம்

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் — ரூபா 5 270/-(நிலையானது) மாதமொன்றுக்கு
2. தற்காலிக கட்டுரை ஆசிரியர் — ரூபா 4 420/-(நிலையானது) மாதமொன்றுக்கு.
3. தற்காலிக போதனாசிரியர் தரம் 11 (ஆங்கிலத்தில்) — ரூபா 4,750/-(நிலையானது) மாதமொன்றுக்கு
4. தற்காலிக போதனாசிரியர் (பரதநாட்டியம்) மிருதங்கம் / கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு) (வீணை) - ரூபா 4,100/-(நிலையானது) மாதமொன்றுக்கு
5. இடைவரவு விரிவுரையாளர் — ரூபா 150/-மணிக்கு
6. இடைவரவு போதனாசிரியர் — ரூபா 75/- மணிக்கு

1993 மே 12 ம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

பெறுபேறுகளுக்காக காத்திருப்போரிடமிருந்தும் 1994 இல் இறுதித் தேர்வுக்குத் தோற்றுவோரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 X 10 ச.மீ. அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்பதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதி சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல்வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு 114ம் இலக்கத்திலுள்ளயாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1994-11-16 [எ 4504]

"தியாகத்தின் சிகரங்களான மாவீரரை போற்றிடுவோம்"

''இழந்த எமது தாய் நாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்து இந்த மண்ணிற்கே உரமாகிப்போன உத்தமர்கள் தான் இந்த மாவீரர்கள்'' இவ்வாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அப்பத்திரிகை குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது: ''எமது மக்களுக்காகவும் அவர்களின் சுயிட்சமான வாழ்விற்காகவும்எமது எதிர்காலச் சந்ததி இந்த மண்ணில் தலை நிமிர்ந்து உரிமையுடன் வாழ வேண்டுமென்பதற்காகவும், தங்களை முழுமையாக அர்ப்பணிக்கப் போராடியவர்கள் தான் மாவீரர்கள்,

இவர்கள் தாங்கள் பிறந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தங்களின் வாழ்வை விட மக்களின் வாழ்வை பெரிதாக மதித்தார்கள். தன்மானத்துடன் எமது தாய்மொழியான தமிழைப் பாதுகாக்க புறப்பட்டார்கள். இவர்களின் செங்குருதியினால் இந்த மண் சிவந்தது. விடுதலைப் புரட்சி இந்த மண்ணில் சுடர் விட்டு எழுந்தது.

எமது நீண்ட வரலாற்றை நிலைநிறுத்த நடைபெறுகின்ற வரலாற்றுப் போரை வரலாற்று நாயகனை எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழிநடத்திச் செல்கின்றார். இந்த வழிநடத்தலில் உறுதியாக நின்று உன்னத லட்சியத்தை நோக்கி எதிரியோடு போர் புரிந்து எமது தாயகத்தின் பெரும்பகுதியை மீட்டெடுப்பதற்கு உறுதுணையாக நின்ற எமது வீரர்களைப் போற்றிப் பணிவது எமது தலையாய கடமையாகும்.

தமிழீழ மாவீரர் நாள் எமது தாய்நாட்டின் தேசிய நாளாகும். இந்நாள் தமிழீழ மக்களினால் போற்றப்படும் புனித நாளாகும்.

இந்நாளை முன்னிட்டு 15-11-1994 ம் நாள் தொடக்கம் 20-11-1994 ம் நாள் வரை மாவீரர் எழுச்சி வாரமாகும். இந்நாட்களில் பாடசாலை மாணவர்கள் மாவீரர் நினைவாக அலங்கரித்தல், சிரமதானங்களில் ஈடுபடல், மரம் நடுதல் போன்ற நிகழ்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்,

21-11-1994 ம் நாள் காலை 8,30 மணிக்கு பாடசாலைகளில் தமிழீழ தேசியக்கொடி யேற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகும். ஒவ்வொரு நாள் காலையில் மலரஞ்சலி செலுத்தி 30 நிமிட நேரம் மாவீரர் நினைவு நிகழ்வுகளும் நடைபெறும். 27-11-1994-ம் நாள் வரையிலான ஏழு நாட்களில் ஒரு நாளில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் தங்கள் பாடசாலைகளில் முழு அளவிகான சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திச் செய்வதுடன் கோட்ட மட்டத்திலும் நடத்தப்படும் நிகழ்விலும் கலந்து கொள்வார்கள்.

தமிழீழ மாவீரர் நாளான 27-11-1994-ம் நாளன்று மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் நிகழ்வில் அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டு எமது விடிவிற்காக தங்களையே ஆகுதியாக்கிய எமது நெஞ்சமெலாம் நிறைந்து வாழுகின்ற தியாகத்தின் சிகரங்களான மாவீரர்களை நினைவில் நிறுத்தி அவர்களின் தியாகங்களை போற்றிடுவோம்.''

-ரி

பனைமரப் பொருளகம்

கண்டபடி பனை தறிப்பதை கட்டுப்படுத்தும் நோக்கிலும், தறிக்கப்பட்ட பனை மரத்தின் பாகங்களை உரிய முறையில் முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னைவள அபிவிருத்திப் பகுதியினர் ''பனை மரப் பொருளகம்'' என்னும் நிலையத்தை ஆரம்பித்துள்ளனர்.

அத்தியாவசிய தேவைகளுக்காக தறிக்கப்பட்ட பனை மரங்களை குறித்த தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தி விட்டு ஏனைய பாகங்கள் வீணடிக்கப்படுவது அவதானிக்கப் பட்டதன் பேரில் இந் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தலைவலியால் தற்கொலை

டீசல் இயந்திரத்தைக் கண்டு பிடித்த ருடால்ப் டீசல் (1858-1913) இறுதியில் தற்கொலை செய்து கொண்டார். காதல்? பொருளாதார பிரச்னை? எதுவும் இல்லை. தீராத தலைவலிப்பிரச்னை தான்.

தான் சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தும் இழந்த பிறகும் கலங்காமல் இருந்த டீசல், தலைவலியைத் தாங்கமுடியாமல் ஒரு நாள் கப்பலில் சென்று கொண்டிருக்கும் போது கடலில் குதித்து இந்த உலகில் இருந்து விடைபெற்றார்,

வீட்டு வைத்தியம்

நகச்சுற்று: நகச்சுற்றுக்கு மூன்று கொழுந்து வெற்றிலை, எடுத்து அதில் சிறிது சுண்ணும்பு வைத்து அரைத்து விரலில் மேல் வைத்துக் கட்டினால் நகச்சுற்று குணமாகும்.

அஜீரணம்: அஜீரணத்திற்கு இஞ்சிசாறு எடுத்து அதில் சிறிதளவு மிளகுத்தூள் அதேஅளவு ரசகம் சேர்த்து கலக்கி சாப்பிட்டால் அஜீரணம்நீங்கும். நல்ல பசிஉண்டாகும்.

பலதும் பத்தும்

கார்த்திகைச் தீபம்

''கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு'' என்கிறார் தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ''தையலார் கொண்டாடும் விளக்கீடு'' எனத் தேவாரத்திற்குறிப்பிடுகிறார் சம்பந்தர்.

திருக்காளத்தியில் ராஜேந்திரசோழனின் கல்வெட்டில் இதுபற்றிய குறிப்புண்டு. அதேபோல விஜயநகரப் பேரரசர் தேவமகாராய சாசனம் ஒன்று தேவிகாபுரத்து பிரகதாம்பாள் கோவிலில் உண்டு. அதில் இத்தீபவிளக்கிற்கு நெய் வழங்கிய செய்தி உண்டு.

இன்று இங்கு தேங்காய் எண்ணை விலை ஏறும் விரைவைப் பார்த்தால் கோவிலுக்கு அதனைக் கொடுப்பவர் பெயர்களும் கல்வெட்டிற் பொறிக்கும் காலம் விரைவில் வரும் போலத் தெரிகிறது.

— மயூரன்

கிளித்தட்டு அரை இறுதி இறுதிநிலைப் போட்டிகள்

(எஸ். பி.)

உடுவில் கல்விக் காட்ட பாடசாலைகளின் இவ்வாண்டுக்கான கிளித்தட்டு அரை இறுதி, இறுதி நிலைப் போட்டிகள உடுவில் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் நடைபெற உள்ளன.

இம்மாதம் 24ம் திகதி இறுதி நிலை போட்டிகள் இராமநாதன் கல்லூரியில நடைபெறும் அரை இறுதி போட்டிகள் இம் மாதம் 22, 24 ஆம் திகதிகளில் ஸ்தந்தவரோதயா கல்லூரியிலும் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும்.

கிளித்தட்டுப் போட்டிகளில் ஐந்தாம் ஆண்டு பிரிவு ஆண், பெண் கோஷ்டிகளும், 13 வயதுக்குட்பட்ட ஆண்பெண் கோஷ்டிகளும் பங்குபற்றுகின்றன. - 109

பசுந்தாட் பசளை விளைச்சலைப் பெருக்கும்

பசுந்தாட் பசளை என்று கூறும்போது சணல், பூவரசு, காவிளாய், வேம்பு, சீமைக்கிளுவை மற்றும் சில அவரை இனப் பயிர்களும் அடங்கும். இவற்றுள் காவிளாய், பூவரச மிலை, வேப்பிலை மற்றும் சீமைகிளுவை இலை, குழைகள் போன்றவற்றை வேறு இடங்களிலிருந்து சேகரித்துக் கொண்டுவந்து பயிர் செய்யுமிடத்தில் புதைத்து பயிர் செய்வதுண்டு, இவ்வகையான சேதனப்பசளைகள் மண்ணில் காற்றோட்டத்தையும், வேர் உட்புகும் தன்மையையும் கிட்டுகின்றது. அத்துடன் கனிப்பொருட்களையும் பயிருக்குத் தொடர்ச்சியாக கிடைக்க வழி செய்கின்றன. மேலும் நுண்ணுயிர்களின் தொழிற்பாட்டையும் அதிகரித்து சேதனப் பசளை பிரிகையடைந்து பயிர்களுக்குத் தேவையான முக்கிய பயிர்ப் போசனைகளையும் அதிகரிக்கச் செய்வதுடன் மண்ணில் ஈரலிப்பை வைத்திருக்கவும் உதவுகிறது.

மாற்று முறையாக பயிர் செய்யும் இடங்களில் பசுந்தாட் பயிரை (சணல், கௌபி செஸ்பேனியா) பயிரிட்டு சுமார் 50 சதவீதம் பூக்கள் தோன்றியிருக்கின்ற பருவத்தில் புதைத்து 2-3 வாரங்கள் கழிந்த பின்னர் பயிரை நாட்டலாம். இச்சமயத்தில் காபன் நைதரசன் வீதம் திருப்தியாக இருக்கின்றது. இவ்வகையான தாவர வேர்கள் முடிச்சுக்களில் இரைசோபியம் என்னும் பற்றிரியாவினால் நைதரசன் பதிக்கப்படுகின்றது இதனைத் தொடர்ந்து மணிணின் வளம அதிகரிக்கின்றது.

திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தில் வெங்காயப் பயிரில் செய்யப்பட்ட ஆய்வுகள் பசுந்தாட் பசளை இடுவதன் மூலம் பெரு விளைவைப் பெற முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

கெக்ரேயருக்கு 7 தொன் பசுந்தாட் பசளை இடப்பட்ட போது 16 மெற்றிக்தொன் விளைவு கிடைத்துள்ளது. எது வித பசளைகளும் இடப்படாத போது 13 மெற்றிக்தொன் விளைவுதான் கிடைத்துள்ளது. சிபார்சுக்கமைய அசேதனப் பசளை (உரம்) இடப்பட்ட போது ஆகக்கூடிய விளைச்சலான 19. 2 மெற்றிக்தொன் விளைவு கிடைத்துள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

வெள்ளி விருந்து

நீ சரீரியன்று!

கிரேக்க தேசத்தில் ஞானி ஒருவர் இருந்தார். அவரது பெயர்எக்பிக்றெற்றர், ரோமாபுரி மன்னரின் ஆட்சியின் கீழ் அவர் அடிமையாகப்பட்டு மிகவும் அற்ப பிழைகளுக்குக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். அதிகமாக எந்த நாளும் இவ்வாறுக இந்த ஞானியார் தண்டிக்கப்பட்டு வந்தார். ஒரு நாள் அவரது எசமான், ஏதோ ஒருசிறு குற்றத்திற்காகஅவரை மிகவும் வலிமையாக அடித்த காரணமாக கால் ஒடிந்து நொண்டியாகிவிட்டார்.

சில நாட்கள் சென்றபின்பு அவரது நண்பன் பார்க்க வந்தார். நொண்டிக்கொண்டு நிற்பதைக்கண்டு, என்ன நேர்ந்தது? என்று வினவினார், அதற்கு ஞானியார் ஒரு விநோதமான வகையிற் பதில் தந்தார்.

''நான் நொண்டியல்ல ஆனால் எனது கால்கள்தான் நொண்டி'' தன்னை வேகமும் தனது உடலை வேருகவும் நோக்கும் பான்மையாளராக வாழ்ந்து காட்டினார்.

— சுவாமி இராமதாஸ்

தெரிந்து கொள்ளுங்கள்

★ சர்வதேச கராத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட அமெரிக்கன், நேஷனல் கேன்சல் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த கிளாடியா பிளாக் என்பவர் 26 ஆயிரம் பேர்களின் இரத்தத்தைச் சோதித்துப் பார்த்து, அதிக அளவு பழங்களையும் காய் கறிகளையும் சாப்பிட்டு வருபவர்களுக்கு புற்று நோயே வருவதில்லை என்று கண்டு பிடித்திருக்கிறார். கரட், மஞ்சள், மற்றும் ஆரஞ்சு நிறமுள்ள பழங்கள். பச்சை காய் கறிகள் முதலியவற்றில் உள்ள லைட்டமின் புற்றுநோய்க் கிருமிகளை அதிகம் அழிக்கின்றன என்பதுதான் அடிப்படைக் காரணமாம்.

★ சார்லஸ் பானெரிமன் என்ற ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் 1876 -1879 ஆம் ஆண்டுகளில் முதன் முதலாக செஞ்சரி போட்டார் முதல் பேட்ஸ்மேன் என்ற பெருமை இவருக்கு உண்டு,

★ உலகின் முதல் பனிச் சறுக்கு விளையாட்டிற்கான கிளப் நோர்வே நாட்டில் டிராம்ஸோ என்ற இடத்தில் 1861ஆம் ஆண்டு ஆரம்பமானது இங்கு பயிற்சி மட்டுமே கொடுக்கப்பட்டது. இங்கிருந்து பரவிய பனிச் சறுக்கு விளையாட்டை 1831ம் ஆண்டு ஆஸ்திரலியாதான் ஒரு விளையாட்டாக அங்கீகரித்து இதற்கான போட்டிகளை உருவாக்கி முதலில் நடத்தியது.

★ பிரான்ஸ் நாட்டு மத்திய தரக் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் காலை நேரத்தில் தாங்கள் வாங்கும் ஒரு தினசரி பத்திரிகையை, காலைப்பொழுதுபைபிள் என்று கூறிக்கொள்வார்கள். அதன் பெயர் லேஃபிகாரோ.

★ எண்ணற்ற இந்திய மொழிகளுள் முதலில் அச்சேறிய பெருமை தமிழுக்கே உண்டு. 1554 இல் 440 ஆண்டுகளுக்கு முன் போர்த்துக்கல்நாட்டில் லிஸ்பன் நகரில் அச்சான லூசே தமிழ் வினவிடை என்ற தமிழ் நூலே முதல் நூலாகும் 1556 இல் கோவாவில் போர்த்துக்கியரால் அமைக்கப்பட்ட அச்சகத்தில் இறையியல் உரைகள் என்ற நூல் அடுத்து அச்சாகியது.

★ பெண்களை மணமுடிக்க மணமகன் பெண் வீட்டிற்குள் நுழையும் போது மணமகளை பூக்களை வீசி அவனை வரவேற்பாள். இது எந்த நாட்டில் தெரியுமா? இந்தோனேசியாவில்

★ பீசார் ஷெரீப் என்ற இடத்தில் ஓர் அதிசயம் நடந்திருக்கிறது சுமார் இருபது பெண்கள் தத்தம் கணவர்களை கயிற்றில் கட்டி இழுத்துக் கொண்டு போய் பொலி

(5-ம் பக்கம் பார்க்க)

தமிழ் இலக்கிய சுவை

கறவை பசு ஒன்று தருக

பொன் விளைந்த களத்தூர் படிக்காசுத் தம்பிரான் தலை சிறந்த தமிழ்ப் புலவர் புலமைக்குரிய தகுதிகளில் வறுமையும் என்று என்ற நியதி ஏற்பட்டிருக்கும்போது அது அவரை விட்டுவிடுமா என்ன! வல்லை மாநகர் காளத்தியப்பர் கொடையுள்ளம் படைத்த செல்வர், புலவர் மேல் அனுதாபங்கொண்டு சமய சந்தர்ப்பங்களில் உதவி வருபவரும் கூட. தகுதியுள்ள இத்தகைய செல்வர் சிலர் வாழ்ந்தனலே தான் தமிழ்ப்புலவர்கள் வறுமையைமறந்து வாழமுடிந்தது ரப்பிடியில் சிக்கி உழலாமல் பாடிவர முடிந்தது.

அப்போது படிக்காசுக்கு குழந்தை பிறந்திருந்தசமயம் அவர் மனைவி தங்கச் சிலையை போல் ஓர்ஆண் குழந்தையை பெற்றிருந்தாள். குழந்தைக்குத் தாய்ப்பால் மட்டும் போதவில்லை. அக்கம் பக்கத்து வீட்டில வாங்கியளிக்க உதவுபவர்களும் இல்லை. பசுவின்பால் கிடைக்காதுஎன்று இல்லை. அதே சமயம் அறிந்து வாங்கி அளிக்க வீட்டில் சிற்றுட்கள் ஒருவரும் கிடையாது அந்தக் குறைதான், குறை தீரக் குழந்தைக்கு வேளாவேளைக்கு பால் கிடைக்கச் செய்ய என்ன வழி எவறு யோசித்தார் படிக்காசுத் தம்பிரான் யோசனை ஒரு முடிவுக்கு வந்தது. ஓட்டை எடுத்தார். வல்லைமாநகர் காளத்தியப்பர் ஒரு சீட்டுக்கவி எழுதினார் காரியம வெற்றியே என்ற நம்புக்கையுடன்ஓராள் வசம் ஏட்டைக் கொடுத்தும் காளத்தியிடம் அனுப்பினர்;

''பெற்றுள் ஒரு பிள்ளை என் மனை
யாட்டி அப்பிள்ளைக்குப் பால்
பற்றாது கஞ்சி குடிக்கும்
தரமல்ல பால் அரக்கச்
சிற்றுளும் இல்லை இவ்
வெல்லா
வருத்தமும் தீர இரு
கற்றுதரவ லேபா?
வல்லைமா
நகர் காளத்தியே

மறுநாள் பொழுது சாய்கின்ற நேரத்திற்கு ஏடு கொண்டு போன ஆள் தலை ஈத்துப் பசு ஒன்றும் அதன் கன்றும் உடன் கொண்டு வந்து சேர்ந்தான். புலவர் கண்களில் ஈரப்பசை தட்டியது. காளத்திநாதரின் பரந்த மனதையும் தம் வாக்கிற்கு அவர் கொடுத்த மதிப்பையும் நினைத்தபோது அவருக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது கொல்லையில் புதிதாகக் கீற்று வேய்ந்த மாட்டுக் கொட்டம் ஒன்று உண்டாக்க வேண்டிய அவசியம் இப்போது அவருக்கு ஏற்பட்டது. ''கறவைப் பசு தருக!'' என்று அதிகாரியைப் போல் ஏடெழுதிக் கேட்டார், கனிந்த உள்ளத்துடன் கன்றெடு கூடிய பசுவை அனுப்பினர் காளத்தியப்பர்.

—க. செல்வராசா

மணிவாக்கு

நான் சேவையின் மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்பதை அறிந்தேன். ஆகையால் சேவையே என்னுடைய மதம் ஆக்கிக் கொண்டேன்.
— காந்தி

நமது நோக்கு

புறக்கணிப்பா?

வழி என்ன?

''பயங்கரவாதநிலை என்று கூறிக் கொண்டு, முன்னைய அரசு வட கிழக்கைப் பொருளாதார ரீதியாகப் புறக்கணித்து வந்துள்ளது!'' எனப் பொது சன முன்னணியைச் சேர்ந்த உதவி அமைச்சர் மட்டக்களப்பிற் கூறியுள்ளார்.

பொதுவாக - பதினேழு ஆண்டு காலமாக மாத்திரமல்ல - அன்னியர் ஆட்சி அகன்ற காலம் முதலே, தமிழர் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டன என்பதே உண்மை.

புறக்கணிப்பு என்பது பொருளாதார அடிப்படைவிதிகளைக்கூட மதிக்காமல் நடந்தது; வெளிநாட்டு, நிபுணர்கள் ஆலோசனைகளைக்கூட 'தூக்கி எறிந்து' விட்டு நடைபெற்றது.

இதற்குச் சில உதாரணங்களை மாத்திரமே கட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சீனித் தொழிற்சாலை நிறுவுவது பற்றி வெளிநாட்டு நிபுணர்கள் ஆலோசனை பெறப்பட்டது. துணுக்காய் சிபார்சு செய்யப்பட்டது. நடந்தது என்ன? சிங்களக் குடியேற்றப் பிரதேசமான கந்தளாய் தெரிவு செய்யப்பட்டது.

வாழைச்சேனையில் இரண்டு 'காட்போட்' மில்கள் உருவாக்கலாம் என ஜேர்மன் நிபுணர்கள் சிபார்சு செய்தனர். நடந்தது என்ன? ஆலோசனை புறக்கணிக்கப்பட்டு, போலி வாதங்கள் கூறப்பட்டு, எம்பிலிப்பிட்டியா தெரிவு செய்யப்பட்டது.

பரந்தன் தொழிற்சாலையை விஸ்தரிக்கக் கூறப்பட்ட ஆலோசனைகள் என்னவாயின? இருந்தால் தானே விஸ்தரிக்க வேண்டும் என்ற 'நற்சிந்தனையோடு' அதனை அப்படியே கழற்றி வேறிடத்தில் நிறுவவே திட்டம் தீட்டப்பட்டது.

நாட்டின் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி பற்றிய கவலையின்றி, குறுகிய அரசியல், இனவாதக் சிந்தனையால் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட 'குளறுபடிகள்' ஆய்வாளர்களுக்கு நல்ல கருப்பொருள் என்பதைக் கட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இன்று -புதிய சிந்தனையோடு செயற்பட மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அதற்கேற்ற வகையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

'குடுமி' அங்கிருக்கு மட்டும் புறக்கணிப்புகள் தொடரும் என்பதை உணர்ந்து, அதற்கேற்ற வகையில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்!

அகதிகளுக்கு வந்த பெருமளவு பணத்தை அரசியல்வாதிகள் ஏப்பமிட்டனர்!

(கொழும்பு)

1985ம் ஆண்டும் அதனை அடுத்து தொடர்ந்த இனக் கலவரங்கள் மற்றும வடக்கு கிழக்கு போர் ஜே வி. பிரச்னைகளால் பொதுமக்களே அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர். வெளிநாட்டு உதவிகளுடன் இவர்களுக்கான புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் என்ற பெயரில் ஆரம்பமான திட்டத்தில் அரசியல்வாதிகளும் அவர்களின் உறவினர்களுமே அதிக நன்மையை பெற்றுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்தக் காலப்பகுதியில் எல்லா சமூகத்திலிருந்தும் 5 லட்சத்து 10 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயந்து அகதிகளாகினர். 40 ஆயிரம் குடும்பங்கள் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனனர்.

எனினும் இவர்களுக்கு வழங்கும் உதவி திட்டத்தை பாதிக்கப்பட்ட அரசியல்வாதிகட்கும் அரசாங்கம் விஸ்தரித்தது. இதனால் பொதுமக்களிலும் பார்க்க அரசியல்வாதிகளும் அவர்களின் உறவினர்களுமே அளவில்லா நன்மையடைந்துள்ளனர்.

ஒரு பொதுமகன் இறந்தால் 50,000 ரூபா, காயப்பட்டு ஊனமுற்றால் 25,000 ரூபா என்பதே திட்டமாக இருந்தும், இது அரசியல்வாதிகளுக்கு நடந்தால் 6 லட்சமாக திட்டமிடப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது.

147 அரசியல்வாதிகளின் கோரிக்கைக்குமி27மில்லியன் ரூபாவும் 31,235 பொதுமக்களின் கோரிக்கைக்கு 939 மில்லியன் ரூபாவும் மரணம் ஊனமுற்றோருக்கான நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் சொத்துடமை பாதிப்பால் அரசியல்வாதிகட்கு 5 லட்சம் ரூபாவும் அரசாங்க உத்தியோகத்தர்கட்கு 1,50,000 ரூபாவும் வழங்கப்பட்டிருந்த போதும் பொதுமக்களுக்கு இதனால் ஒன்றும் கிடைக்கவில்லை. இதனால் 37 மில்லியன் ரூபாவை சியல்வாதிகளும் 303 மில்லியன் ரூபாவை அரசாங்க உத்தியோகத்தர்களும் பெற்றுள்ளனர்.

ஆயுதம் ஏந்தாததும் தீவிரவாதத்தில் ஈடுபடாததுமான பொதுமக்களே வன்செயல் காலங்களில் பாதிப்புற்ற போதும், அவர்களுக்கு இந்த திட்டங்களினால் எதுவித நன்மையும் கிட்டவில்லை.

அரச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்தப்படும் இவ்வேளையில், போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை புறக்கணித்து அரசியல்வாதிகட்கும் அவர்களது உறவினர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து பெற்ற உதவி, அளவுக்கதிகமான சலுகைகள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது பற்றி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் எனவும் அக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கே-சி

இன்று

(கொழும்புத்துறை)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் விஷ்ணு ஆலயதீபம் இன்று வெள்ளிக்கிழமை மாலை விசேட அபிஷேகம் பூசை ஆராதனையுடன் இடம்பெறும், -154

0 0

(கொழும்புத்துறை)

நெல்லியடி தடங்கன் புளியடி ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய திருக்கார்த்திகை உற்சவம் இன்று பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியில் வரணி வடக்கு கறுக்காய் சனசமூக நிலையத்தில் இன்றுகாலை வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்: (154)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக ஊழியர்களில் துவிச்சக்கரவண்டிக்குப் பணம் செலுத்திய 150 பேரில் 100 பேருக்கு ஆடவர் துவிச்சக்கர வண்டி இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு மாணவர் பொது அறையில் வைத்து வழங்கப்படும்.

0 0

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர்சங்க சகல செயற்குழு உறுப்பினர்களையும் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணிக்கு ஊழியர் பொது அறையில் கூடுமாறு ஊழியர் சங்க தலைவர் திரு. ச. க, தனேந்திரன் கேட்டுள்ளார்.

சனசமூக

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இறப்பு விவாகப் பதிவாளர் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி சு. ஸ்ரீவிக்கினேஸ்வரா தெரிவித்துள்ளார்.

திருமணம் செய்து கொண்ட ஆண்டு, மாதம், திகதி ஆகிய முழுவிபரங்களையும் கடிதமூலம் எழுதி விவாகப்பதிவு செய்ய விண்ணப்பிக்குமாறு அவர் கோரியுள்ளார். (154[

தெரித்து கொள்ளுங்கள்

(4 ம் பக்கத்தொடர்ச்சி)

சார் முன் நிறுத்திஇருக்கிறார்கள். இவர்களது குற்றச்சாட்டு என்ன தெரியுமோ? இந்தக் கணவர்கள் வீட்டுச் செலவுக்காக பணம் எதுவும் தராமல் தங்கள் சம்பாதிப்பைத் தாங்களே ஜாலியாக அனுபவித்தது தான்.

மாவீரர் நாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் தொடர்பாக கீழ்வரும் பாடசாலை ஆசிரியர்களுக்கு இன்று 18-ம் திகதி கலந்துரையாடல் நடத்தப்படும்.

அச்சுவேலி ம. வி. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யூனியன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, மல்லாகம் ம. வி. நடேஸ்வராக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி குறிக்கப்பட்ட பாடசாலைகளில் பிற்பகல் ஒரு மணியளவில் இக்கலந்துரையாடல்கள் நடாத்தப்படும். -ரி

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994—11—18
வெள்ளி இரவு

08-01 கலைமஞ்சரி - நிகழ்ச்சி முதலில் நூல் அறிமுகம். அறிமுகமானது ரி, உதயசூரியன் எழுதிய ''மாறாத மனங்கள்'' சிறுகதைத் தொகுதி அதனையடுத்து சிறுகதை. இலக்கியா எழுதிய ''புதிய மாற்றம்'' சிறு கதையைத் தொடர்ந்து கவிதை- நல்லை அமிழ்தன் எழுதிய ''தமிழன் ஆட்சி''

08-25 கணப்பொழுது - சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் லாலா ரஞ்சன்''

08-30 செய்திகள்

08-40 அரசியல் அரங்கம்- வே, பாலகுமாரன் எழுதிய ''கிழக்குத் திமோர்'' இன்னும் உயிர் வாழ்கின்றது''

09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994—11—19
சனி காலை

07-02 மாவீர வணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகை செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

பணம் எமக்குத் தேவை எனில் பனை எமது தேவை

மாவீரர் சோலை மீண்டும் 10 ஏக்கரில் விஸ்தீரணம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவாக தென்மராட்சிப் பகுதியிலுள்ள கெற்பலி என்னும் இடத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் சோலை இவ் ஆண்டு மேலும் 10 ஏக்கரால் விஸ்தீரணமாக்கப்படவுள்ளது.

இதில் 02 ஏக்கர் நிலப்பரப்பில் சவுக்கம் கன்றுகளும். 02 ஏக்கரில் இலுப்பையும், 02 ஏக்கரில் மகோகனியும், 02 ஏக்கரில் வேம்பங்கன்றுகளும், 02 ஏக்கரில் புளியங்கன்றுகளும் நடுகை செய்யப்படவுள்ளன.

தற்போது காடு துப்பரவு செய்யப்பட்டு சுற்று வேலிகள் அடைக்கப்பட்டு மரநடுகைக்கான குழிவெட்டும் பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்ற வருடம் 10 ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் பயன்தரு பல இன மரக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவீரர் எழுச்சி வார கூட்டங்கள், சிரமதானங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி யாழ் மாவட்டத்தில் இன்று 18ம் திகதி பின்வரும் இடங்களில் சிரமதானங்கள் நடைபெறவுள்ளன.

சிரமதானம்

கோப்பாய் புத்தூர் லோறன்ஸ் வீதி. சண்டிலிப்பாய் இரட்டைப்புலம் பிள்ளையார் கோயில் அருகிலுள்ள வீதி திருத்துதல், பளை மசார் வீதி- வாய்க்கால் திருத்தம், பளை மருத்துவமனை சூழல் துப்பரவு, கைதடி, அப்பன் குடியேற்ற திட்டம் துப்பரவு, பருத்தித்துறை கரும்புலிகள் குடியிருப்பு சுற்றாடல் துப்பரவு, ஓடக்கரை வெள்ள வாய்க்கால் துப்பரவு, வட்டுக்கோட்டை பரகத்தி வள்ளியம்மை குடியிருப்பு - துப்பரவு செய்தல், துரவுகள் நிரப்புதல், வடிகால் செப்பனிடல்,

வலிகாமம் கோட்டம்

சுன்னாகம் மாவீரர் நினைவு தூபி, புன்னாலைக்கட்டுவன் சந்தி ஆகியன துப்பரவு செய்தல். சாவகச்சேரி சிவன் கோவிலடி. மாவீரர் நினைவுத் தூபி ஆகியன துப்புரவு செய்தல், பருத்தித்துறை மேஜர் ரஞ்சன் பூங்கா துப்பரவு செய்தல்.

கூட்டங்கள்

இன்று கூட்டங்கள், வீதி நாடகம் இடம் பெறும் இடங்களின் விபரம்; கொட்டடி ஸ்ரார் ச. ச, நிலையம், யாழ் பாரதி ச.ச.நிலையம்: கோப்பாய் சூசையப்பர் கோயில் உடுவில் கணேசா ச. ச நிலையம் நல்லூர் அருணோதயா ச. ச. நிலையம் நல்லூர் அரியாலை பாரதி ச. ச நிலையம். சுதுமலை பராசக்தி ச. ச நிலையம், மூளாய் இந்து இளைஞர் மன்றம், சங்கரத்தை தமிழன் ச. ச. நிலையம், இணுவில் சிந்து ச. ச நிலையம், இணுவில் மல்வம் ஞானப்பிரகாசர் கோயில், அளவெட்டி காளிகோயிலடி, அளவெட்டி கலைவாணி ச. ச. நிலையம் ஆகியவற்றில் இரவு 7-30 மணிக்கு நடைபெறும். பளை இந்திரபுரம் ம. ச. ச. நிலையம்- மிருசுவில் விக்கி ம ச. ச, நிலையம், மீசாலை சங்கத்தானை கோபாலரங்கு மறவன்புலோசகல கலாவல்லி வித்தியாலயம் ஆகியவற்றில் இரவு 7 மணிக்கும் கரவெட்டி மாயக்க பாலர்பாடசாலை நீதவான் குடியிருப்பு சத்தியக்காடு குடியிருப்பு ஆகியவற்றி இரவு 7 30 மணிக்கும் நடைபெறும். ரி

வருடாந்த கூட்டம்

(வேலணை)

யாழ், மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வரும் மாதம் 4ம் திகதிஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகுமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சம்மேளனத் தலைவர் திரு. வை. செகராசசிங்கம் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறவிருக்கின்றது. [75]

பயிற்சிபெறும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தி செய்ததும் இவர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படுமென்று அமைச்சு அறிவித்துள்ளது.
வி இ

வடபகுதிவரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பலில் பத்து தொன் ஆயுதங்கள் இருக்கலாமென்று தெரிவிக்கப்பட்டது. இக் கப்பல் தொடர்பான தகவலையடுத்து இலங்கை அரசு விமானப்படையினரையும், கடற்படையினரையும் கண்காணிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.
(ரிவி)

மீனவர்களுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள். இவர்கள் மாதாந்தம் 65 ரூபாவை இத்திட்டத்துக்கு செலுத்தவேண்டும்.

மீனவர் ஒருவர் 60 வயதைக் கடந்ததும் ஓய்வூதியம் பெறத்தகுதி உடையவராவார். இவருக்கு ஓய்வூதியமாக மாதாந்தம் 4215 ரூபா வழங்கப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்தது. வி-இ

ஜனாதிபதி ஆணைக்குழுவினால் தேர்தல் வன்முறை பற்றிய விசாரணைகள் ஆரம்பம்!

29 படுகொலைச் சம்பவம் விசாரணையில்

[கொழும்பு]

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும்நடைபெற்ற தேர்தல் வன்முறைகளை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியினால் நியக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின் போது மொத்தம் 29 படுகொலைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகளை இக்குழு விசாரணை செய்யும்.

இதில் பொதுசன முன்னணியைச் சேர்ந்த 28 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர் ஒந்தருவரும்படு கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மற்றும் கடைஎரிப்பு கைக்குண்டு வீச்சு, தாக்குதல் சம்பவங்கள் பற்றிய பல முறைப்பாடுகளும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரால் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போதும் கொலைச் சம்பவங்கள், கடை எரிப்பு, கைக்குண்டுவீச்சு, தாக்குதல் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

இத்தேர்தல் வன்முறைகள் பெரும்பாலும் தன்விலை எட்டியாந்தோட்டை, மாத்தளை, பதுளை, கேகாலை ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன. தன்விலவில் மட்டும் தனிநபர் ஒருவர் ஏழு கடைகளை தீயிட்டுக் கொளுத்தியதுடன் கொள்ளையும் அடித்துள்ளார்.

இம்முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் அனைத்தையும் மேற்படி ஆணைக்குழு அடுத்தமாதம் 29ம் திகதிக்கு முன்பு பூர்த்திசெய்து அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவேண்டும் இதன் பின்பு தான் பாதிக்கப்பப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென்று ஜனாதிபதிசெயலகம்அறிவித்துள்ளது

ராணுவ டைவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேடியர் கெமுனு குலதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டது தொடர்பான அறிவிப்பு பற்றி இராணுவ உளவுப் பிரிவுக்கு செய்திகள் கிடைத்துள்ளன. வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடந்தசில நாட்களாக திட்டமிட்ட பாரிய இராணுவத் தாக்குதல்கள் ஏதும் நடைபெறவில்லை.

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தம் குறித்து அரசு இதுவரை கருத்தும் - முடிவும் வெளியிடவில்லை. எனவே இராணுவத்தினரின் நடவடிக்கைகள் எப்பொழுதும்போல் வழமையாகவேதொடருமென்றும் பிரிகேடியர் குலதுங்க தெரிவித்துள்ளார். வி இ

சமாதான

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லையென்றும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்,

பிரிட்டிஷ் வெளிவிவகார பொதுநல பிரதி அமைசசர் ரொனிவோல்ரி சேயுடன்நடத்திய சந்திப்பின்போதே வெளியுறவு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்தும் மற்றும் இருதரப்புவிவகாரங்கள் பற்றி இருவரும் சுமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியேற்றதை அடுத்து இலங்கைக்கு பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் விஜயம் மேற்கொண்டது குறித்து லக்ஷ்மன் கதிர்காமர்மகிழ்ச்சி தெரிவித்தார். (க-இ)

சமாதான சூழ்நிலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாளர் திரு, சு. ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணையங்கள்இணைந்து அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடாத்திய ''அனர்த்தங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை இனம் காணல்'' என்ற கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது: தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் சமாதானத்தின் வெளிப்பாடாக போராட்டம் தீவிரமடையும் காலகட்டங்களில் எல்லாம் சமாதான சூழ்நிலைக்கான நல்லெண்ண சமிக்ஞைகளை காட்டிவருகிறார்.

ஜனாதிபதியாக தற்போது பதவியேற்றுள்ள திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு சமாதானத்தை ஏற்படுத்த சிங்கள மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எனவே அவர் துணிச்சலாக எமது மக்களின் உரிமைகளை வழங்க முன்வரவேண்டும். கடந்த கால வரலாற்றை எண்ணிப்பார்க்கும் நாம் எமது நடவடிக்கைகளை மிகவும் அவதானமாகவும் எச்சரிக்கையோடும் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

பொருளாதரத்தடை தளர்த்தப்பட்டாலும் அவற்றின் முழுமையான பலன் மக்களை சென்றடையவில்லை.

மக்களின் போக்கு வரத்து கஷ்டங்களை நீக்கும் முகமாக போக்குவரத்துப் பாதையை சீராக்கமுயற்சிக்கலாம்என்றார்

லிடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், கல்வியாளர்கள், அரசியல் வல்லுநர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். க-இ

உலகவங்கி இலங்கைக்கு தொடர்ந்தும் உதவும்

]கொழும்பு]

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவி புரியுமென உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி றொபேட்டோ வெஞ்சியாட் தெரிவித்துள்ளார்.

விவசாய காணி, வனவள அமச்சர் டி. எம். ஜயரத்னாவை நேற்று அவரதுஅலுவலகத்தில்சந்தித்தபோதேஉலக வங்கி பிரதிநிதி மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினார், க-இ

தொண்டா

[1ம் பக்கத் தொடர்ச்சி[

றுக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கிறது என்று ஐ. தே. க பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. வின் நிறைவேற்றுக்குழு அடுத்தமாதம் மூன்றாம் திகதி கூடவிருக்கிறது. திரு. ஏ. ஜே. ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க தொடர்பாகவும் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் தீர்மானத்தை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார். ரி வி

வடக்கு—கிழக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்கி]

ஆட்சிக்குவந்த இந்த புதிய அரசாங்கத்தின்மீது எமக்கு பூரண நம்பிக்கை உண்டு. இந்த அரசாங்கம் எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் பூரண ஆதரவு வழங்கும். அத்துடன் அரசாங்கத்தின் இந்த சமாதான முயற்சிகளின் பிரதி பலிப்பை சர்வதேச சமூகம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

'இந்த நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்னைகள் இருக்கின்றபோதிலும் வடக்கு-கிழக்குப் பகுதியின் சமாதான முயற்சிக்கு புதிய அரசு முன்னுரிமை வழங்கியதை பிரிட்டிஷ் அரசாங்கம் பாராட்டுகின்றது'' என்று கூறினார். வி-இ

கிளாலியிலிருந்து

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பஸ் சாரதி திரு. எஸ். இரங்கன் (42 வயது] பயணிகளின் அவலக்குரல்களுக்கு மத்தியில் பஸ்சை சாதுரியமாகச் செலுத்தி பயணிகளைக்காப்பாற்றினார்.

இச்சம்பவம்பற்றி அறிய வருவதாவது;

சம்பவதினம் அதிகாலை சுமார் 1·40 மணியளவில் சாவகச்சேரி நகர்ப்பகுதியை சம்பந்தப்பட்ட பஸ் அண்மித்ததும் பலாலி விமானப் படைத்தளப்பக்கம் இருந்து வந்த சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான ஹெலி ஒன்று சரமாரியாக பஸ்சை நோக்கி சுட்டது.

இச்சம்பவத்தின் போது சாரதி உட்பட பயணிகள்நால்வர் படுகாயம் அடைந்தனர். சாவகச்சேரி நகர்ப்பகுதிவரை சாரதி பஸ்சை செலுத்தி வந்து அங்கிருந்து ஏனைய வாகனச் சாரதிகளின் உதவியுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபின் பயணிகள்தமது பயணத்தைதொடர்ந்தனர். இச்சம்பவத்தின்போது காயப்பட்ட பயணிகளின் விபரம் எதுவும் தெரியவரவில்லை.

ஹெலியின் திடீர்தாக்குதலையடுத்து சாவகச்சேரிநகர்ப் பகுதியில் உறக்கத்தில் ஆழ்திருந்தோர் பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்,

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் அரசுக்கு நல்லெண்ண சமிக்ஞையாக ஒருவாரகாலம் இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருக்கும் இக்காலப்பகுதியில் இத்தகைய தாக்குதல் ஒன்று நடைபெற்றிருப்பது இங்கு குறிப்பிடப்தக்கது. 155-இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.

3-ம் தவணைக்கான பொது அறிவுத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால்நடாத்தப்பெறும் மூன்றாம் தவணைக்கான பொது அறிவுத் தேர்வின் முதனிலைப் பிரிவுக்கான (6, 7. 8 -ஆம் ஆண்டுகளுக்கான தேர்வு நாளை 19-ம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

6-ம்,7-ம் ஆண்டு மாணவர்களுக்கான வினாத்தாள்களைப் பாடசாலை அதிபர்கள் நாளை காலை 8 மணிக்கு தத்தம் கோட்டப் பணிமனைகளிலிருந்து பெற்றுத் தேர்வினை நடத்துமாறும் 8-ம் ஆண்டு மாணவர்களுக்கான பொது அறிவுத் தேர்வு தற்போது இளநிலைத் தேர்வு நடைபெற்றுககொண்டிருக்கும் தேர்வு நிலையங்களிலேயே நடைபெறும் என்றும் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பளை, நல்லூர், யாழ்ப்பாணம் கோட்டப் பாடசாலைகளுக்கான வினாத்தாள்களை முறையே யூனியன் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி யாழ். மத்திய கல்லூரிகளில் இயங்கும்தேர்வு நிலைய இணைப்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

8-ம் ஆண்டு மாணவர்களின் விடைத் தாள்களும். புள்ளிதிட்டங்களும் கோட்டப் பணிமனைகளினூடாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுமென்றும் இடைநிலை, உயர்நிலை பிரிவுகளுக்கான பொது அறிவுத்தேர்வு எதிர்வரும் 23 புதன்கிழமை நடைபெறும் என்றும் தேர்வுஆணை ரொஸர் மேலும் அறிவித்துள்யார்.

★ 60 வியட்னாமிய

அகதிகளை விலங்கிட்டு ஆஸி. நாடு கடத்தியது!

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரியிருந்த 60 வியட்னாமியரை பலவந்தமாக அவுஸ்திரேலிய அரசு நேற்று நாடுகடத்தியது.

இந்தோனேஷியா அகதிமுகாமிலிருந்து மேற்படி 60 வியட்னாமியரும் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் கடந்த மாதம் பிரவேசித்து அகதி அந்தஸ்து கோரினார்கள்

இவர்களின் இக்கோரிக்கையை அவுஸ்திரேவியா நிராகரித்ததுடன்அவர்களை பலவந்தமாக நாடுகடத்தி மீண்டும்இந்தோனேஷியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது

இந்த அகதிகள் அனைவருக்கும் கைகளில்விலங்குகள் மாட்டப்பட்டிருந்ததாகவும் இவர்களில் சிலரை பொலிஸார் கைகளுக்கும் கால்களுக்கும் விலங்கிட்டு விமானத்துக்குள் தூக்கிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவின் இச்செயலை உலகில் உள்ள பெரும்பாலான அகதிகள் ஆதரவுக்குழுக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன. வி இ

சந்திரிகாவுக்கு ஜெயலலிதா வாழ்த்து

(சென்னை)

''இலங்கையில் ஏற்றி வைத்ததீபம் மகிழ்ச்சியை ஏற்படுத்தட்டும்'' என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா காத்திகைத் தீபத்திருநாளை ஒட்டி சென்னையில் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அண்மையில் தெரிவு செய்யப்பட்டதையே அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டதாகஅரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-இ)

மரண அறிவித்தல்

சிவகுரு சிவசுப்பிரமணியம்

[தங்கோடை — காரைநகர்]

தங்கோடை காரைநகரைச் சேர்ந்த சிவகுரு சிவசுப்பிரமணியம் (மனியம் ஸ்ரோர்ஸ் சுந்தரம்ஸ் பசறை) கொழும்பில் காலமானார். அன்னார் சிவகுரு மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பரமசுந்தரம், கனகசுந்தரம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீனகுமாரியின் அன்பு மாமனாரும், கந்தையா (மதவாச்சி), காலம் சென்ற இராஜதுரை (கிளிநொச்சி), சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி பரமநாதன் மகாலச்சுமியின் (கல்கமுவ) சம்பந்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்;

திருமதி பரமநாதன், மகாலச்சுமி

(சாவகச்சேரி - சம்பந்தி)

கச்சாய் வீதி, சாவகச்சேரி

(ஏ-1319)